# தனிமைப்படுத்தப் படுகிறதா தி.மு.க.?

தி.மு.க. அதற்கு எதிரான பொய்களையும் அவதூறுகளையும் எதிர்கொள்வது இது முதல் முறையல்ல. தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்திலிருந்து அதற்கு எதிரான கட்டுக்கதைகளை எதிர்த்துப் போராடித்தான் 75 ஆண்டுகளாக இந்த இயக்கம் தன்னை நிலைநிறுத்திக்கொண்டிருக்கிறது.

தி.மு.க. தலைவர் நம்மோடு இருந்தவர்கள்மேல் கடுமையான வார்த்தைகளை பிரயோகிக்க கூடாது என அறிவுறுத்தியிருக்கிறார். அதே சமயம் அரசியல் களத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்பதை ஆராய்வது நமது கடமை.

இப்போது ஊடகங்களில் பரப்பப்படும் கட்டுக்கதைகளில் ஒன்று தி.மு.க.வுடன் இருந்த கூட்டணிக் கட்சிகள் இப்போது த.வெ.கவை ஆதரிப்பதால் தி.மு.க. பலவீனமடைந்து விட்டது என்பதாகும். அரசியல் வரலாறு தெரியாதவர்களும் தி.மு.க. வரலாறு தெரியாதவர்களும் யாரையோ திருப்திப்படுத்தவோ அல்லது தங்கள் சுயவன்மத்தை தீர்த்துக்கொள்ளவோ சொல்லும் கதை இது. தமிழ் நாட்டின் தேர்தல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் தேர்தலுக்கு தேர்தல் கூட்டணிகள் மாறிக்கொண்டே இருந்திருக்கின்றன. இந்தியா முழுமைக்குமே இது பொருந்தும்.

அதற்கு ஒரே விதிவிலக்காக தி.மு.க. தலைவர் ஒரு கூட்டணியை எட்டு ஆண்டுகளாக கட்டிக் காத்தார். அதை வெற்றிகரமான கூட்டணியாக கொண்டு செலுத்தினார். கொள்கை வழிப்பட்ட கூட்டணியாக அதை வலிமைப்படுத்தினார். இரண்டு நாடாளு மன்றத் தேர்தல்கள், இரண்டு சட்டமன்ற தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள் என களம் கண்ட இந்தக் கூட்டணி 2026ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் மட்டும் ஒரு புதிய சூழலால் வெற்றிவாய்ப்பை இழந்த போதும் ஒன்றரைகோடிக்கும் மேல் வாக்குகளைப் பெற்று 73 இடங்களைப் பெற்றது.

இதில் தி.மு.க. 54 இடங்களில் வெற்றி பெற்றது காங்கிரஸ் 5 இடங்கள்,வி.சி.க.: 2 இடங்கள், சி.பி.எம். (CPM)2, இடங்கள் சி,பி.ஐ. (CPI): இடங்கள், ம.தி.மு.க. 2 இடங்கள், ஐ.யு.எம்.எல். 2 இடங்கள், கொ.ம.தே.க., 1 இடம், ம.ம.க 1 இடம், ம.ஜ.க 1 இடம் வீதம் வெற்றி பெற்றன. இதன் பொருள் என்னவென்றால் தி.மு.க. கடும் பின்னடைவைச் சந்தித்த ஒரு தேர்தலில்கூட கூட்டணிக் கட்சிகளுக்காக கடுமையாக உழைத்து அவர்களின் வெற்றியை உறுதிப்படுத்தி அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுத் தந்திருக்கின்றது.

தமிழ்நாட்டின் மற்றொரு மிகப்பெரிய கடசியான அ.தி.மு.க. 47 இடங்களைக் கைப்பற்றிய போதும் இந்தியாவை ஆளும் அதன் கூட்டணிக் கட்சியான பா.ஜ.க. 1 இடத்திலும் பா.ம.க. 4 இடங்களிலும் அ.ம.மு.க. 1 இடத்திலுமே வென்றன.

இப்போது சொல்லுங்கள், கூட்டணிக் கட்சிகளின் வெற்றிவாய்ப்பை கடுமையான சூழலிலும் உறுதிப்படுத்திய கட்சி எது? தலைவர் யார்?

ஆனால் மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த இந்தக் கூட்டணியில் முதல் தாக்குதலைத் தொடுத்தது காங்கிரஸ். பிறகு வேறு சில கட்சிகள் அதைப்பின் தொடர்ந்தன. தேர்தலுக்கு முன்பாகவே இட பேரங்கள், ஆட்சியில் பங்கு கோஷங்கள் பொதுவெளியில் முன்வை க்கப்பட்டன. எட்டு ஆண்டுகளாக நம்பகமான கூட்டணி என்ற நம்பிக்கையை சிதறு தேங்காயை போல ஒவ்வொருவராக உடைத்தன. பா.ஜ.க.வும் அ.தி.மு.கவும் பல வருடம் இந்தக் கூட்டணியை உடைப் பதற்காக செய்த முயற்சிகளை தி.மு.க. கூட்டணிலிருந்த சிலரே தங்களது சில தனிப்பட்ட அபிலாஷைகளுக்காக சிதறுதேங்காயைபோல சிதறடித்தனர்.

இது தி.மு.க.விற்கு செய்த துரோகம் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்களுக்கு செய்த துரோகமாகும். பொருளாதார வளர்ச்சி, சமூக நலன், சமூக நீதி, மாநில உரிமைகள் சார்ந்து மிகப்பெரிய பாய்ச்சலை நிகழ்த்திக்கொண்டிருந்த ஒரு அரசை தோல்வியடையச் செய்ததில் இவர்களுக்கு முக்கிய பங்குண்டு. இதில் சில கட்சிகளுக்குள் ஊடுருவிய பா.ஜ.க. மற்றும் த.வெ.க. ஏஜெண்டுகள் இந்த காரியத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தனர்.

## த.வெ.க கூட்டணி உண்மையிலேயே ஒரு கூட்டணியா?

தேர்தலில் விஜய் அழைத்தும்கூட யாரும் அவருடன் கூட்டணி சேர முன்வரவில்லை. காங்கிரஸ் உள்ளிட்ட சில கட்சிகள் விஜய்யுடன் ரகசிய பேச்சுவார்த்தையில் இருந்தபோதும் அவர்கள் தி,மு.க. கூட்டணியிலேயே நீடித்தனர். விஜய்யின் அரசியலை சிலர் கடுமையாக விமர்சிக்கவும் செய்தனர். காரணம் தி.மு.க. கூட்டணி தான் வெற்றி பெறும் என எல்லாதரப்பினரும் உறுதியாக நம்பினர். வெற்றியின் பக்கம் இருப்பதுதான் கொள்கை என நினைத்திருந்தனர் என்பதை காலம் நிரூபித்து கொண்டிருக்கிறது.

த.வெ.க.விற்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அ.தி.மு.க. ஆதரவளிக்கத் தயாராக இருந்த போதும் தி.மு.க. கூட்டணியை உடைக்க வேண்டும் என்ற சதித்திட்டத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டது. ஜனாதிபதி ஆட்சி வந்துவிடும் என்ற பூச்சாண்டி பரப்பப்பட்டது. தனிப்பெரும் கட்சியாகவே த.வெ.க.வை ஆட்சியமைக்க அழைக்க முடியும் என்றபோதும் ஆளுநர் 118 பேர் ஆதரவு வேண்டும் என அடம் பிடித்தார். காங்கிரஸ் தேர்தல் முடிவுகள் வந்ததும் தனது பழைய திட்டத்தின்படி த.வெ.க.வை நோக்கி ஓடோடிச் சென்றது. தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் ஆளுநர் ஆட்சி வராம லிருக்க த.வெ.கவை வெளியே இருந்து ஆதரிக்க போவதாகவும் ஆனால் தி.மு.க. கூட்டணியில் நீடிப்பதாகவும் அறிவித்தன.

பிறகு ‘சோபா மாடல்’ அறிமுகமானதும் எல்லாம் தலைகீழானது. மின்னல் வேகத்தில் முடிவுகள் மாறின. காங்கிரசுடன் சேர்ந்து வி.சி.க.வும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கும் த.வெ.க. மந்திரி சபையில் இணைந்தனர். த.வெ.க.வை எதிர்த்து தி.மு.க. கூட்டணியில் களம் கண்டவர்கள் மூன்றே வாரத்தில் அதே த.வெ.க. கூட்டணி அமைச்சரவையில் மின்னல் வேகத்தில் களம் கண்டனர்.

இதற்கு சிலர் சொன்ன காரணம் என்ன தெரியுமா? தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் இணைந்து ஆட்சியமைக்க முயன்றன, அதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று சொல்ல ஆரம்பித்தனர். யார் அப்படி உங்களிடம் சொன்னார்கள் என்று கேட்டால் ’அதிகாரபூர்வமாக யாரும் சொல்லவில்லை, சும்மா கேள்விப்பட்டோம்’ என மழுப்பினார்கள். அதாவது தி.மு.க. கூட்டணியில் நின்று வெற்றி பெற்று சில நாட்களிலேயே தி.மு.க.வை அழிப்பதற்காகவே உருவாக்கபட்ட த.வெ.க. கூட்டணி ஆட்சியில் பங்கேற்றால் அது ஜனநாயகம். ஆனால் தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் கூட்டணி ஆட்சி அமைக்க முயல்கின்றன என வதந்தி பரவினாலே அது அபச்சாரம். அதாவது எல்லா அறத்தையும் அரசியல் ஒழுக்கத்தையும் தி.மு.க.விற்கு மட்டுமே கற்பித்துக்கொண்டிருக்க வேண்டும். அ.தி.மு.க., தி.மு.க. கூட்டணி என்ற திட்டமிட்டுப் பரப்பிய வதந்தியை தி.மு.க. கூட்டணியை விட்டு வெளியேற ஒரு சாக்காக ஒவ்வொருவராக பயன்படுத்தினர். அதை ஊடகங்களில் சிலர் இடையறாது பரப்பினர். நடக்காத ஒன்றைக் காட்டி பல நாடகங்களை நடத்தினர்.

தங்கள் ஆதரவின்மூலம் த.வெ.க.வை தங்கள் விருப்பப்படி செயல்படச் செய்யலாம் என விஜய்யின் திடீர் கூட்டாளிகள் கனவு கண்டனர். ஆனால் விஜய்யின் ‘ ஒரிஜினல் ஓனர்’ டெல்லியில் இருக்கிறார் என்பதை நன்கறிந்தும் வாராது வந்த மாமணிபோல தங்களுக்குக் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது இறுகப் பற்றிக் கொண்டு அந்த உண்மையை நம்பவிரும்பாமல் இருந்தனர்.

ஆனால் த.வெ.க. இப்போது அ.தி.மு.க.வை இரண்டாக உடைத்திருக்கிறது. ஏற்கனவே தி.மு.க. கூட்டணி கட்சிகளை தன்பக்கம் கொண்டு வந்தாகி விட்டது. பின்னர் அ.ம.மு.க.வின் ஒரே எம்.எல்.ஏ.வை விலைக்கு வாங்கியாகிவிட்டது. அடுத்ததாக அ.தி.மு.கவை உடைத்து தங்கள் பக்கம் கொண்டு வந்துவிட்டால் தி.மு.க. கூட்டணியிலிருந்து வந்த கட்சிகளை சார்ந்து ஆட்சி நடத்தவேண்டியதில்லை. அ.தி.மு.க.தான் த.வெ.க.வின் இயற்கையான கூட்டாளி.



**மனுஷ்யபுத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க.
தகவல் தொழில் நுட்ப அணி

எனவே அ.தி.மு.க.வின் வேலுமணி அணியை ‘ரிசர்வ்’வில் வைத்துக்கொண்டு தங்களுடைய திடீர் கூட்டாளிகளுக்கு ஒரு செய்தியை மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார். ‘ உங்கள் கொள்கை அரசியலை எல்லாம் சுருட்டி வைத்துவிட்டு எங்களுக்கு ஆதரவாக இருந்தால் மட்டுமே கூட்டணியில் நீடிக்கலாம்’ என்பதுதான் அது.

இது த.வெ.க.வின் திடீர் நண்பர்களுக்கு திகிலூட்டிவிட்டது. இப்போது அவர்கள் கடந்த மூன்று வாரங்களாக தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருக்கும் குற்றச் செயல்கள் குறித்தோ, மின் வெட்டு போன்ற பிரச்சினைகள் குறித்தோ ஆளும் கட்சினரின் அடாவடித் தனங்கள் குறித்தோ வாயைத் திறக்க மறுக்கிறார்கள். மாறாக த.வெ.க. அரசிற்கு வக்காலத்து வாங்குகிற அதன் செய்தித் தொடர்பாளர்களாகவே இந்த திடீர் கூட்டாளிகள் மாறிப்போனதுடன் ‘ தி.மு.க.வினர் எடுத்ததெற்கெல்லாம் இந்த அரசை குறை சொல்லக்கூடது ‘ என அறிவுரை வழங்கும் அளவு சந்திரமுகியாகவே மாறி நிற்கின்றனர்.

ஆனாலும் அவர்கள் ஒரு விஷயத்தில் மட்டும் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அ.தி.மு.க.விலிருந்து விலகி த.வெ.க.வுடன் இணையும் எம்.எல்.ஏ.களை விஜய் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று மன்றாடுகிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் வந்தால் தங்கள் இடம் காலியாகிவிடும் என்பதுதான். இன்னும் சில அ.தி.மு.க. எம்.எல்.ஏ.கள் ராஜினாமா செய்தால் சட்டமன்ற பெரும்பான்மைக்கான இடங்களும் குறைந்துவிடும், த.வெ.க. இப்போது இருக்கும் இடத்தை வைத்துக்கொண்டே இடைத் தேர்தல்வரை ஆட்சி நடத்த முடியும். இந்தக் கூட்டணிக் கட்சிகளின் தயவு தேவைப்படாத ஒரு ஆட்சியை நடத்துவதுதான் விஜய்யின் நோக்கம். அப்படி தேவை என்றால் விஜய்யின் பதவியேற்பு விழாவிற்கு ஓடோடி வந்த ராகுல் காந்திக்கு பதில் மரியாதையாக கேரளாவில் காங்கிரஸ் மந்திரிசபை பதவியேற்பு விழாவிற்கு போயிருக்கலாம். அல்லது பிரதமரை சந்திக்க டெல்லி சென்றவர் ராகுல் காந்தியையோ சோனியா காந்தியையோ சந்தித்திருக்காலாம். செய்யவில்லை என்பதிலிருந்தே விஜய் காங்கிரஸை எப்படிப் பார்க்ககிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். மேலும் அப்படிச் செய்தால் அதை மோடியோ அமித்ஷாவோ விரும்பமாட்டார்கள் என்று விஜய்க்கு நன்கு தெரியும்.

கட்சித்தாவல் என்பதை இந்தியா முழுக்க ‘ நார்மலைஸ்’ செய்த கட்சி பா.ஜ.க. என்றால் இருந்த இடத்தில் இருந்தே எதிர்முகாமிற்கு போவதில் எந்தக் கூச்சமும் இல்லாதவர்களைக்கொண்ட கட்சி காங்கிரஸ். இன்னொரு கட்சியின் எம்.எல்.ஏகளை தங்கள் பதவியை ராஜினாமா செய்ய வைத்து பிறகு அவர்களை இடைத் தேர்தலில் தங்கள் கட்சியின் சார்பாகவே போட்டியிடச் செய்து ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தி அதிகாரத்தை கைப்பற்றும் மாடலை இந்தியாவிலேயே அறிமுகப்படுத்திய கட்சி பா.ஜ.க. அந்த மாடல்தான் இன்று தமிழ்நாட்டில் பா.ஜ.க.வால் செயல்படுத்தப்படு கிறது.

பல மாநிலங்களில் இதுபோன்ற தங்கள் கட்சி எம்.எல்.ஏ.களையும், எம்.பி.க்களையும் பா.ஜ.க. விலைக்கு வாங்கியபோது கதறிய காங்கிரஸ் இப்போது அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் இணைவது குதிரைபேரமே அல்ல என்று சொல்லும் அளவு சென்றிருக்கின்றனர். ஊடகங்களில் த.வெ.க.விற்கு ஊழியம் செய்யும் பல அரசியல் விமர்சகர்களின் காண்ட்ராக்ட் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அவர்களும் இதை நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர்.

சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் அந்தந்த கட்சிகளைத்தான் செல்வாக்கிழக்கச் செய்யுமே தவிர தி.மு.க.வை அல்ல. த.வெ.க. இப்போதைய தங்களது தற்காலிக கூட்டாளிகளை கழற்றிவிட்டுவிட்டு அசல் கூட்டாளிகளான பா.ஜ.க. அ.தி.மு.க.வுடன் இணைந்து 2029 நாடாளு மன்றத் தேர்தலில் களம் காண்பதுதான் திட்டம். இடைக்கால ஏற்பாடாக இப்போது தன்னுடன் வைத்திருக்கும் கூட்டாளிகளை வெளியேற்றுவதற்கான அல்லது வெளியேறுவதற்கான சூழலை விஜய் உருவாக்குவார்.

சற்று நிதானியுங்கள் தோழர்களே... அனுசரிப்ப தற்கும் விட்டுக்கொடுப்பதற்கும் விஜய், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அல்ல.

தி.மு.க.விற்கு கூட்டணி விஷயத்தில் ஏற்பட்டிருப்பது தோல்வியோ பலவீனமோ அல்ல. காட்சிகள் மாறும் போது கூட்டணிகளும் மாறும். இந்த தற்காலிக இடைவேளையை தி.மு.க.வின் அழிவு என்று குதூகலிப்ப வர்கள் கடந்த காலத்தைப்போலவே எதிர்காலத்திலும் ஏமாற்றமடைவார்கள். இஸ்லாமியர்கள், தலித்துகள், விளிம்பு நிலை மாந்தர்களின் உரிமைகளையும் நலன்களையும் எப்போதும் தி.மு.க. பாதுகாத்து வந்திருக்கிறது. அவர்களை தி.மு.க.வை விட்டு எவராலும் பிரிக்க இயலாது.

---

### கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு

# தி.மு.க. மாநில மகளிரணி - மகளிர் தொண்டரணி ஆலோசனைக் கூட்டம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

### கழக மகளிரணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் - மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி அறிக்கை!

சென்னை, மே 30-
கழக மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மகளிர் தொண்டரணி செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை முன்னிட்டு தி.மு.க. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் தி.மு.க. தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு அரிய பல ஆலோசனைகள் வழங்க இருக்கிறார்.

13.6.2026 சனிக்கிழமை காலை 10 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கூட்டம் நடைபெறுகிறது. மாநில மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள், பிரச்சாரக் குழு, வலைதளக்குழு, ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், அனைத்து மாவட்டங்களின் மகளிரணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

கடந்த 5 ஆண்டுகளில் அளப்பரிய சாதனைகளைப் படைத்த நம் திராவிட மாடல் அரசு, எப்படி வெற்றி வாய்ப்பை இழந்தது என்ற அதிர்ச்சியும், ஆச்சரியமும், நமக்கு மட்டுமல்ல, நடுநிலையாளர்கள், நல்லிதயம் படைத்தோர், அத்தனை பேர் உள்ளத்திலும் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இதிலிருந்து மீண்டு, நம்மை பலப்படுத்திக் கொள்ளவும், தோல்வியை, வெற்றிக்கான படிக்கட்டுகளாக மாற்றிடவும், இந்த முக்கியமான தருணத்தில் நம் கழகப் பணி எவ்வாறு அமைந்திடல் வேண்டும் என ஆலோசனை கூறவும், நம் கழகத் தலைவர் அவர்கள் கலந்துகொள்ளும் இந்த முக்கியமான கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், கணியூர் பேரூராட்சி முன்னாள் செயலாளரும், பேரூராட்சி முன்னாள் தலைவருமான கழக மூத்த முன்னோடி தி.சேதுராமன் வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். அவரின் உடலுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், உடுமலை சட்டமன்ற உறுப்பினர் மு.ஜெயக்குமார் ஆகியோர் கழக கொடி போர்த்தி இறுதி அஞ்சலி செலுத்தினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# நீலகிரி மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜூ எம்.எல்.ஏ. அறிவிப்பு!

உதகை, மே 30-
நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜூ எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீலகிரி மாவட்ட தி.மு.க. கூட்டம் 1.6.2026 திங்கட்கிழமை காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவைதலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர் கா.ராமசந்திரன் மற்றும் கூடலூர் சட்ட மன்ற உறுப்பினர் மு.திராவிடமணி ஆகியோர் முன்னிலையில் உதகை ஒக்கலிகர் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில், கழக துணை பொதுச்செயலாளர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றியபேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

பொருள்: 1. முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் - “புத்தெழுச்சி நாள்” நிகழ்ச்சிகள் சிறப்புடன் நடத்துவது குறித்து.


2. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



161–வது வட்ட இளைஞர் அணி–மாணவர் அணி–பாக இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு.டி.பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.இக் கூட்டத்தில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் கலாநிதிகுணாளன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கோ.பிரவீன்குமார்,பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.ஜாகீர்உசேன்,சொ.சஞ்சீவி வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அபிஷேக் வட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரவீன்குமார் மற்றும் இளைஞர் அணி – மாணவர் அணி நிர்வாகிகள்,கழக நிர்வாகிகள் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

22-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி. கமலா அரங்கநாதன்
நினைவு தினம் 16–05–2004
திரு. மு. அரங்கநாதன் Ex. M.L.A.
நினைவு தினம் 30–05–2004
என்றும் உங்கள் ஆசீர்வாதத்துடன்
The Graphic Design Shop
Cuckoo Garden Mahabalipuram
அலுவலக ஊழியர்கள்,
சென்னை – 14 Mob: +91 94440 74706